தினமணி

# தடம் மாறும் கிராமிய வங்கிகள்!

பி.எஸ்.எம். ராவ்

First Published : 10 Jan 2012 02:57:16 AM IST

ஒரு குழாய் மூலமாக பத்து மணி நேரத்தில் ஒரு தொட்டியை நீரால் நிரப்ப முடியும் என்று வைத்துக் கொள்வோம். மற்றொரு குழாயைத் திறந்துவிட்டால் ஒரு மணி நேரத்தில் தொட்டி காலியாகிவிடும் என்றால், இரு குழாய்களும் திறந்திருக்கும்போது எவ்வளவு நேரத்தில் தொட்டி முழுமையாக நிரம்பும்?

பள்ளிக்கூடத்தில் நாம் படித்த இந்தக் கணக்குக்கு விடை ஒரு காலத்திலும் முடியாது என்பதுதான். ஆனால், கிராமியக் கடன்கள் விஷயத்தில் அரசு இப்படித்தான் செய்து கொண்டிருக்கிறது.

"அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி' என்பதுதான் நமது அரசின் கவர்ச்சிகரமான கோஷம். இதைக் கூறித்தான் இப்போதைய அரசு ஆட்சிக்கு வந்தது. பொருளாதார வளர்ச்சியின் பலன் அனைவரையும் சென்றடைய வேண்டும் என்பதுதான் இதன் பொருள். அரசியல் பொதுக்கூட்டமானாலும் சரி, தேர்தல் பிரசாரமானாலும் சரி, நாடாளுமன்ற அவைகளில் நடக்கும் விவாதங்களானாலும் சரி எல்லாவற்றிலும் இந்த மயக்கும் வாக்கியத்தைக் கூறுவதற்கு நமது ஆட்சியாளர்கள் தயங்குவதேயில்லை. ஆனால், இதெல்லாம் வெற்றுப் பேச்சுதானே தவிர, நிஜத்தில் அவர்களது நடவடிக்கைகள் அனைத்தும் அதற்கு நேரெதிர்தான்.

எந்த அளவுக்கு அனைவரையும் வளர்ச்சியில் உள்ளடக்குவதற்கான முயற்சி நடக்கிறதோ, அதைவிடப் பல மடங்கு வேகமாக வெளியேற்றும் பணி நடப்பது தெளிவாகத் தெரிகிறது. எல்லாவிதமான திட்டங்களிலும், நடவடிக்கைகளிலும் இதே கொள்கையைத்தான் நமது அரசு கடைப்பிடித்து வருகிறது. சொல்லில் ஒன்றும் செயலில் ஒன்றுமாக அரசின் பணி இதே ரீதியில் தொடர்ந்தால் இன்னும் நூறு ஆண்டுகள் ஆனாலும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பது சாத்தியமாகப் போவதில்லை.

இது அரசியல்வாதிகளுக்கும் தெரியும். ஆனாலும், தங்களது கோஷங்களை அவர்கள் நிறுத்துவதாக இல்லை. மக்கள் கைகொட்டிச் சிரிப்பார்கள் என்பதை எண்ணிக்கூட வெட்கப்படாமல், ஏழைகளை முன்னேற்றுவதற்காக அதைச் செய்கிறோம், இதைச் செய்கிறோம் என்று புள்ளிவிவரங்களை அடுக்கிக் கொண்டிருக்கிறார்கள்.

அண்மையில் கொல்கத்தாவில் நமது நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி பேசும்போது, நடப்பு நிதியாண்டில் முதல் ஆறு மாத காலத்துக்கான விவசாய வங்கிக்கடன் இலக்கு

எட்டப்பட்டுவிட்டதாகத் தெரிவித்தார். அதாவது நிதியாண்டுக்கு ரூ. 4.75 லட்சம் கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதில், மார்ச் முதல் செப்டம்பர் 2011 வரையிலான காலகட்டத்தில் ரூ. 2.23 லட்சம் கோடி கடன் வழங்கப்பட்டிருக்கிறது என்பது பிரணாப் தரும் புள்ளி விவரம். இதன்படி இந்த நிதியாண்டின் முழுமையான இலக்கும் எட்டப்பட்டுவிடும்.

இதற்குச் சில நாள்களுக்கு முன்பு பிரணாப் இன்னும் உற்சாகமாக இருந்தார். நடப்பு நிதியாண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கையும் தாண்டி ரூ.5 லட்சம் கோடிக்கும் அதிகமாகக் கடன்கள் வழங்கப்படும் என்று கூறியிருந்தார். நபார்டு வங்கியின் தலைவரும் பிரணாபை ஆமோதித்தார். அவர் சொன்ன தொகை ரூ.5.2 லட்சம் கோடி!

இவர்களது கணிப்பு சரிதான். கடந்த சில ஆண்டுகளை ஒப்பிட்டுப் பார்க்கையில் இந்தக் கணிப்பு பொய்த்துப் போவதற்கான வாய்ப்பு மிகக் குறைவு. வங்கிகள் மூலம் வழங்கப்படும் விவசாயக் கடன்களை 3 ஆண்டுகளில் இரட்டிப்பாக்க வேண்டும் என்று 2004-ம் ஆண்டில் அரசு முடிவு செய்தது. ஆனால், ஆச்சரியப்படத்தக்க வகையில் இரண்டே ஆண்டில் இந்த இலக்கு எட்டப்பட்டது. அதன்பிறகு ஒவ்வோர் ஆண்டும் இலக்கு உயர்த்தி நிர்ணயிக்கப்பட்டது. சொல்லிவைத்தாற்போல ஒவ்வொரு ஆண்டிலும் இலக்கைத் தாண்டி கடன்கள் வழங்கப்பட்டதுதான் சுவாரசியமான விஷயம். 2008-09 முதல் 2010-11 வரை ஒவ்வொரு நிதியாண்டிலும் முறையே ரூ.2.8 லட்சம் கோடி, ரூ.3.25 லட்சம் கோடி, ரூ.3.75 லட்சம் கோடி என இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டன. ஆனால், முறையே ரூ.2.87 லட்சம் கோடி, ரூ.3.85 லட்சம் கோடி, ரூ.4.47 லட்சம் கோடி இலக்குகளைக் கடந்து கடன்கள் வழங்கப்பட்டன.

வரும் ஆண்டுகளில் இன்னும் அதிகமான இலக்குகள் நிர்ணயிக்கப்படும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. இதை உறுதிப்படுத்தும் வகையில் அடுத்த 5 ஆண்டுகளில் விவசாயத்துறைக்கு ரூ. 40 லட்சம் கோடி தேவை என்று நபார்டு வங்கியின் செயல் இயக்குநர் எஸ்.கே.மித்ரா கூறியிருக்கிறார்.

இந்தப் புள்ளிவிவரங்களைப் படிப்பவர்களுக்கு சில நியாயமான சந்தேகங்கள் எழக்கூடும். அரசுதான் இவ்வளவு கடன்களை வழங்குகிறதே, பிறகும் ஏன் விவசாயிகள் தனியார் நிறுவனங்களை நாடுகிறார்கள், கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாமல் ஏன் தங்களைத் தாங்களே மாய்த்துக் கொள்கிறார்கள் என்று கேட்கலாம்.

தேசிய குற்றப் பதிவு அமைப்பின் ஆவணங்களின்படி 1995 முதல் 2010 வரை 2,56,913 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள். இது சர்ச்சைக்குரிய எண்ணிக்கைதான். கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு தற்கொலைகள் குறைந்திருப்பதாகச் சிலர் சொல்கிறார்கள். 2011-ம் ஆண்டில் வெறும் 800 பேர்தான் தற்கொலை செய்து கொண்டதாக வேளாண்துறை அமைச்சர் சரத்பவார் பிரத்யேகமாக ஒரு புள்ளிவிவரத்தைத் தருகிறார். எது எப்படியிருந்தாலும், கடன்தொல்லை காரணமாக அதிக எண்ணிக்கையிலான விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கிறார்கள் என்பது மட்டும் மறுக்க முடியாத உண்மை.

அரசு என்னதான் விவசாயிகளுக்கு கடன்களை வாரி வழங்கிக் கொண்டிருக்கிறோம் என்று கூறிக் கொண்டிருந்தாலும், இலக்குகளைத் தாண்டியும் கடன்கள் வழங்கப்படுவதாகப் புள்ளிவிவரங்களை அடுக்கினாலும், தேவைப்படுவோருக்கு அந்தக் கடன்கள் சென்றடையவில்லை என்பதைத்தான் இது காட்டுகிறது. அரசு கூறுவது வெறும் வாய்ஜாலம் என்பதை தற்கொலை செய்துகொள்ளும் விவசாயிகளின் எண்ணிக்கை உணர்த்திக் கொண்டிருக்கிறது. கடன் வழங்கும் முறையில் குறைபாடு இருப்பதற்கு இதுவே ஆதாரம்.

விவசாயம் செய்வோரில் 80 சதவிகிதம் பேர் சிறு மற்றும் விளிம்பு நிலை விவசாயிகள். இவர்களுக்குக் கடன் வழங்குவதே விவசாயத்தை பாதுகாப்பதற்கும், வேலைவாய்ப்புகளை உறுதி செய்வதற்குமான வழிமுறை. ஆனால், இவர்களுக்குக் கடன்கள் கிடைப்பதில்லை என்பதுதான் உண்மை நிலை. இது தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட சாரங்கி குழு, விளிம்பு நிலை விவசாயிகளில் வெறும் 14 சதவிகிதம் பேருக்கு மட்டும் வங்கிக் கடன் போன்ற அமைப்பு சார்ந்த கடன்கள் கிடைப்பதாகக் கூறியிருக்கிறது.

இந்தியாவில் 87 சதவிகித விளிம்புநிலை விவசாயிகளுக்கும் 70 சதவிகித சிறு விவசாயிகளுக்கும் வங்கிக்கடன் கிடைப்பதில்லை என்று உலக வங்கியே தனது அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. இந்தப் புள்ளிவிவரங்களை இன்னும் உன்னிப்பாகக் கவனித்தால் விவசாயிகளில் 51 சதவிகிதம் பேருக்கு எந்தவிதமான கடனோ, பிற வங்கிச் சேவைகளோ கிடைப்பதில்லை என்கிற உண்மை புலனாகும்.

ரங்கராஜன் கமிட்டியின் அறிக்கையின்படி வெறும் 27 சதவிகித விவசாயிகளுக்கே அமைப்பு சார்ந்த கடன்கள் கிடைக்கின்றன. இதிலும் மூன்றில் ஒரு பகுதியினர் தனியார் அமைப்புகளின் மூலம் கடன் பெறுபவர்கள். அதாவது 18 சதவிகித விவசாயிகளுக்கு மட்டுமே வங்கிக் கடன்கள் கிடைக்கின்றன. அந்த 18 சதவிகித அதிருஷ்டக்காரர்களில் பெரும்பகுதியினர் பணக்கார, பெரு விவசாயிகள் அல்லது அதிகாரம் படைத்தவர்கள்.

இது ஒன்றும் அறியாமலோ தெரியாமலோ நேர்ந்துவிட்டது கிடையாது. 1990-களில் அரசு கொண்டு வந்த புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவுதான் இது. அரசு வங்கிகள் அனைத்தும் லாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு இயங்க வேண்டும், கிராமப்புற ஏழைகளிடமிருந்து கொஞ்சம் தள்ளி நிற்க வேண்டும் என்பவையெல்லாம் அந்தக் கொள்கை மூலமாகச் சொல்லிக் கொடுக்கப்பட்டது.

ஒருபுறம் கிராமப்புற ஏழைகளுக்கு எளிதாகக் கடன்கள் கிடைக்க வேண்டும் என்பதே லட்சியம் என்று வெளிப்படையாகக் கூறிக் கொண்டிருக்கும் வங்கிகள், இன்னொருபுறம் கிராமங்களில் தங்களது கிளைகளைக் குறைத்துக் கொண்டிருக்கின்றன.

ரிசர்வ் வங்கி புள்ளிவிவரங்களின்படி 1991-ம் ஆண்டில் கிராமங்களில் 35,206 வங்கிக் கிளைகள் இருந்தன. 2011-ம் ஆண்டில் இந்த எண்ணிக்கை 33,602-ஆகக் குறைந்திருக்கிறது. அதே நேரத்தில் நகரங்களில் தெருவுக்குத் தெரு வங்கிகள் திறக்கப்பட்டிருக்கின்றன.

1991-ல் வங்கிகளின் 58.46 சதவிகித கிளைகள் கிராமப்புறங்களில் இருந்தன. இப்போது அது 36.10 சதவிகிதமாகக் குறைந்திருக்கிறது.

அதேபோல், கிராமப்புறக் கடன்களுக்காக உருவாக்கப்பட்ட கூட்டுறவு வங்கிகள் போன்றவையும் தங்களது நோக்கத்தை மறந்து வேறு வகைக் கடன்களுக்கு முக்கியத்துவம் அளிக்கத் தொடங்கிவிட்டன. 1993-94-ம் நிதியாண்டில் 62 சதவிகிதம் அளவுக்கு விவசாயக் கடன்கள் வழங்கிக் கொண்டிருந்த கூட்டுறவு வங்கிகள் 2009-ம் ஆண்டில் வழங்கிய விவசாயக் கடன்களின் அளவு வெறும் 12 சதவிகிதம் மட்டுமே!

பிராந்தியக் கிராமிய வங்கிகளுக்கும் இதே நிலைதான். கிராமப்புறங்களில் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும் மக்களின் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக உருவாக்கப்பட்ட இந்த வங்கிகள், இப்போது வழக்கமான வர்த்தக வங்கிகளைப் போலச் செயல்பட்டு வருகின்றன. கிராமங்களையும் ஏழ்மையையும் மறந்து, பண ஆதாயம் தேடும் வழிகளை மட்டுமே அந்த வங்கிகள் கடைப்பிடித்து வருகின்றன. கிராமங்களை விட்டுவிட்டு நகரங்களை நோக்கி இடம்பெயர்ந்து கொண்டிருக்கின்றன. அரசு இதைப்பற்றி வாய்திறப்பதேயில்லை.

இப்படி எல்லா வங்கிகளும் கிராமங்களையும், விவசாயத்தையும் கைவிட்டுவிட்டதால்தான் மக்கள் தனியார்களிடம் கையேந்தும் நிலை ஏற்பட்டிருக்கிறது. குறுங்கடன் அமைப்புகள் என்கிற பெயரில் கந்து வட்டிக்காரர்கள் பெருகி, மக்களிடமிருந்து வியர்வையையும் ரத்தத்தையும் வட்டியாக உறிஞ்சிக் கொண்டிருக்கின்றனர்.

இதையெல்லாம் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் அரசு, இன்னமும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியைப் பற்றிப் வாய்கிழியப் பேசிக் கொண்டிருக்கிறது.

பருவமழை பொய்த்துப் போவது, பிற இயற்கைச் சீற்றங்கள் காரணமாக, விதைத்த பணத்தைக் கூட அறுவடை செய்ய முடியாமல் தவித்து வரும் விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமானால், முதலில் கிராமிய வங்கிகளை வர்த்தகமயமாக்குவதைக் கைவிட வேண்டும்.

கூட்டுறவு சங்கங்கள் கிராமப்புற மக்களின் நிதித் தேவையைப் பூர்த்தி செய்பவையாக மீண்டும் மாற வேண்டும். இவைபற்றி அரசு அக்கறை எடுத்துக்கொள்ளாதவரை, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பது வெற்று வாக்குறுதியாகத்தான் இருக்கும்.

**வெங்காய விலை சரிவு**

First Published : 09 Jan 2012 02:28:09 PM IST

வெள்ளக்கோவில், ஜன. 8: வெள்ளக்கோவில் வாரச் சந்தையில் தொடர்ந்து இரண்டாவது வாரமாக வெங்காயம் விலை குறைந்து வருகிறது.

சின்ன வெங்காயம் கிலோ ரூ.10, பெரிய வெங்காயம் ரூ.12 என விற்கப்பட்டது. இவற்றின் உள்ளூர் வரத்து குறைந்த போதும், வெளி ஊர்களிலிருந்து கூடுதலாக வந்ததால் விலை குறைந்துள்ளது.

மற்ற முக்கிய காய்கறிகளின் விலை விவரம் (கிலோவுக்கு):

தக்காளி-ரூ.10, கத்தரி-ரூ.20, வெண்டைக்காய்-ரூ.25, பீட்ரூட்-ரூ.30, முட்டை கோஸ்-ரூ.28, உருளைக்கிழங்கு, கேரட்-ரூ.25, கீரை கட்டு-ரூ.6 வரை.

இச்சந்தையின் வியாபாரம் அதிகரித்து வரும் நிலையில், புதிதாக வாழைத்தார்களின் வரத்தும், விற்பனையும் அதிகரித்து வருகிறது.

---

தினமலர்
உண்மையின் உரைகல்

**விவசாயிகளுக்கு நலத்திட்ட உதவி**

திவு செய்த நாள் : ஜனவரி 10,2012,01:12 IST

கருத்தை பதிவு செய்ய

காஞ்சிபுரம் : உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா, காஞ்சிபுரத்தில் நடந்தது. கலெக்டர்(பொறுப்பு)சுதர்சன் தலைமையில் நடந்த இந்த விழாவில், அமைச்சர் சின்னையா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, 174 பயனாளிகளுக்கு, 24 லட்சத்து 69 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நலத்திட்டங்களை வழங்கினார்.

அவர் பேசும்போது,""தேர்தல் அறிக்கையில் கூறிய அனைத்து திட்டங்களையும், தமிழக முதல்வர் ஜெயலலிதா செயல்படுத்தி வருகிறார். உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு, பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகின்றன. விவசாயிகள் இத்திட்டத்தில் சேர்ந்து பயன்பெற வேண்டும்," என்றார்.

விழாவில், எம்.எல். ஏ.,க்கள் சோமசுந்தரம், கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட ஊராட்சி தலைவர் பன்னீர்செல்வம், நகராட்சி தலைவர் மைதிலி, ஒன்றியக் குழுத் தலைவர் ஜீவானந்தம் உட்பட, பலர் கலந்து கொண்டனர். துணை கலெக்டர் சிராஜ்சின்னிசா வரவேற்றார். ஆர்.டி.ஓ., வீரப்பன் நன்றி கூறினார்.

**போரான் சத்து குறைந்தால் நெல்லி விளைச்சல் பாதிக்கும்: விஞ்ஞானிகள் எச்சரிக்கை**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2012,01:00 IST

திருவள்ளூர் : நெல்லியில் போரான் சத்து பற்றாக்குறை ஏற்பட்டால், விளைச்சல் பாதிக்கும் என, விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்

இதுகுறித்து, திரூர் நெல் ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர் மாணிக்கம் மற்றும் பேராசிரியர்கள் லாவண்யா, முரளிதரன் கூறியதாவது: போரான் சத்து பயிர்களுக்கு இன்றியமையாதது. போரான் சத்து பற்றாக்குறை பல பயிர்களில் தென்பட்டாலும், மிக முக்கியமாக பலவகை மூலிகை மற்றும் பழப் பயிர்களுக்கு மிகவும் தேவைப்படுகிறது. போரான் சத்துக் குறைவால் பூக்கள் மற்றும் பழங்கள் உதிர்வது அதிகப்படியாக காணப்படுகிறது. இச்சத்துக் குறைவால், பழவகையைச் சேர்ந்த நெல்லிக் காய்களின் விளைச்சல் பெரிதும் பாதிக்கப்படுகிறது. போரான் சத்து பற்றாக்குறை பசால்ட் எனும் கனிமம் நிறைந்த நிலங்களில் மிகவும் காணப்படுகிறது.

அறிகுறிகள் : நெல்லிக் கனிகளில் முதன்முதலில் உட்பகுதிகள் காயத் தொடங்கும். அச்சமயத்தில் பழத்தின் உள்ளுரை கெட்டியாக மாறிவிடும். இது தீவிரமடைவதை பொறுத்து, பழத்தின் வெளிப்பகுதி பழுப்பு கலந்த கறுப்பு நிறத்தில் பரவி காணப்படும். பின்னர் அவை சொறி போன்று மாறி, அதில் இருந்து பிசின் போன்று தோன்றும்.

நிவர்த்தி : போராக்ஸ் 0.6 சதவீதத்தை ஒரு மாத கால இடைவெளியில் மூன்று முறை தழை தெளிப்பாக தெளிக்க வேண்டும். அதேபோல், சோடியம் போரேட்டு, 5 கிலோ என்ற அளவில் இட வேண்டும். இட்டபின் நீர் கட்ட வேண்டும். இக்குறைபாட்டை மண்வழி மூலமாகவும் நிவர்த்தி செய்யலாம். இதை விவசாயிகள் முறையாக மேற்கொண்டால், நெல்லிக்காய் உற்பத்தியில் நிறைய லாபம் சம்பாதிக்கலாம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**தென்னை தரும் விற்பனை வாய்ப்புகள் : முகாமிற்கு விண்ணப்பங்கள் வரவேற்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2012,03:16 IST

சிதம்பரம் : சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் பொருளாதாரத்துறை சார்பில் தென்னை தரும் விற்பனை வாய்ப்புகள் தலைப்பில் நடைபெறும் பயிற்சி முகாமில் பங்கேற்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.
வரும் 31ம் தேதி நடைபெறும் பயிற்சி முகாமில் தென்னை உற்பத்தி தொழிலதிபர்கள், முன்னோடி

விவசாயிகள், வேளாண் அறிஞர்கள் மற்றும் நுகர்வோர்கள் தென்னையில் உள்ள விற்பனை வாய்ப்புகள் பற்றி நேரடி விளக்கம் அளிக்க உள்ளனர்.

இம்முகாமில் பங்கேற்று பயன்பெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பெயர், முகவரி, கல்வி தகுதி, புகைப்படம், மொபைல் எண் ஆகியவற்றை 5 ரூபாய் தபால் தலை ஒட்டப்பட்ட சுய விலாசமிட்ட உறையுடன் ஒருங்கிணைப்பாளர் (தென்னை தரும் விற்பனை வாய்ப்புகள் பயிற்சி) வேளாண் பொருளாதாரத்துறை, வேளாண் புலம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அண்ணாமலை நகர் என்ற முகவரிக்கு வரும் 20ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம். இதனை வேளாண் பொருளாதாரத்துறை பேராசிரியர் சுந்தரவரதராஜன் கேட்டுக் கொண்டுள்ளார்.

**மரவள்ளி மூட்டை விலை ரூ.600 ; அமைச்சர் தலைமையில் முத்தரப்பு கூட்டம் நடத்த வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2012,02:40 IST

சேலம் : "மரவள்ளி கிழங்கு கடும் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதால், வேளாண்., அமைச்சர் தலைமையில் முத்தரப்பு கூட்டம் நடத்தி, ஒரு மூட்டை கிழங்குக்கு, 600 ரூபாய் விலை நிர்ணயம் செய்ய வேண்டும்' என, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. தமிழகத்தில், நான்கு லட்சம் ஹெக்டேர் பரப்பளவில், மரவள்ளி கிழங்கு விவசாயம் செய்யப்படுகிறது. சேலத்தில் மட்டும், ஒரு லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் மரவள்ளி விசாயம் செய்யப்படுகிறது. தர்மபுரி, நாமக்கல், ஈரோடு உள்ளிட்ட மாவட்டங்களில், அதிகளவு மரவள்ளி விவசாயம் செய்யப்படுகிறது. கடந்த ஆண்டை விட மரவள்ளி கிழங்கு விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளதால், விவசாயிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்த ஆண்டு "சேகோ' மூட்டை, 3,900 முதல், 4,000 ரூபாய் விலையிலும், ஸ்டார்ச் 90 கிலோ கொண்ட மூட்டை, 2,500 முதல், 2,600 ரூபாய் வரை விற்பனை செய்யபப்பட்டது. தற்போது, "சேகோ' மூட்டை, 2,331 முதல், 2,679 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. "ஸ்டார்ச்' மூட்டை, 1,331 முதல், 1,457 ரூபாய் விலையில் விற்பனை செய்யப்படுகிறது. மரவள்ளி கிழங்கு, 28 பாயின்ட் கொண்ட ஒரு டன், 2,500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு மூட்டை மரவள்ளி கிழங்கு, 185 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு மூட்டை, 375 முதல், 400 ரூபாய் என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டது. கடந்த ஆண்டை விட மரவள்ளி

கிழங்கு கடுமையான விலை வீழ்ச்சியை சந்தித்துள்ளதால், விவசாயிகள் பொருளாதார ரீதியாக கடும் பிரச்னைகளை சந்திக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்டச் செயலாளர் தங்கவேல் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் மாவட்டக்குழுக்கூட்டம் நடந்தது. இதில் பொதுச் செயலாளர் சண்முகம் மற்றும் மலைவாழ் மக்கள் சங்க பொதுச் செயலாளர் பழனிசாமி, அகில இந்திய விவசாயித் தொழிலாளர் சங்க மாவட்ட தலைவர் வெங்கடாசலம், மாவட்ட செயலாளர் கணபதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மரவள்ளி கிழங்கு விலை இந்தாண்டு கடுமையாக வீழ்ச்சி அடைந்துள்ளது. எனவே, வேளாண் அமைச்சர் தலைமையில், தமிழக அரசு முத்தரப்பு கூட்டம் நடத்த வேண்டும். மரவள்ளி கிழங்கு விலை வீழ்ச்சியால் பாதிப்புக்குள்ளாகியுள்ள விவசாயிகளை மீட்க, மரவள்ளி கிழங்கு மூட்டைக்கு, 600 ரூபாய் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். அதே போல, சேலம் மாவட்டத்தில், "தானே' புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும். மஞ்சளுக்கு கட்டுப்படியான விலை அளிக்க வேண்டும். கரும்புக்கு டன் ஒன்றுக்கு, 3,000 ரூபாய் வழங்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. மேலும், மரவள்ளி கிழங்கு விளையும், சேலம் உள்ளிட்ட, 18 மாவட்டங்களை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொள்ளும் சிறப்பு பேரவைக்கூட்டம், வரும் 19ம் தேதி, சேலம் திரைப்பட நகரில் உள்ள சங்க அலுவலகத்தில் நடத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**தக்காளி விவசாயிகளுக்கு மதிப்பு கூட்டுதல் பயிற்சி வகுப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2012,02:55 IST

தர்மபுரி: பாலக்கோடு தக்காளி வணிக வளாகத்தில் குளிர்பதன கிடங்கில் சேமித்தல் , சந்தைப்படுத்தல், மதிப்பு கூட்டுதல் தொடர்பான விவசாயிகளுக்கு பயிற்சி நடந்தது. மாவட்ட இணை இயக்குனர் ராஜன் பயிற்சியை துவக்கி வைத்தார். தர்மபுரி வருவாய் கோட்ட (வேளாண் வணிகம்) வேளாண் அலுவலர் தாம்சன் வரவேறறார். வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை மூலம் தக்காளி சாகுபடி செய்த விவசாயிகளை ஒருங்கிணைத்து 23 தக்காளி விளை பொருட்கள் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. தக்காளி உற்பத்தியாளர்கள் குழு விவசாயிகளின் தக்காளியை கொள்முதல் செய்வதற்கான சென்னை "தேவராஜ் அக்ரோ ஃபுட்ஸ்' நிறுவன விற்பனை மேலாளர் வினோத், கோவை "எஸ்.ஏ.வெஜிடபுள்' உரிமையாளர் பஷீர் ஆகியோர் விவசாயிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தனர்.

தக்காளி வணிக வளாகத்தில் 50 மெட்ரிக் டன் கொள்ளவு கொண்ட குளிர்பதன கிடங்கிள்

தக்காளியை எவ்வாறு சேமிப்பது, எந்த தருணத்திலும் அறுவடை செய்து குளிர்பதன கிடங்களில் சேமிக்க கொண்டு வருவது தொடர்பான செயல்விளக்க பயிற்சியை "புளூ ஸ்டார்' ஏ.சி., நிறுவன பொறியாளர் ஜான்பெர்னான்ட்ஸ் செயல்விளக்கம் செய்து காட்டினார். தக்காளி மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் தயாரிப்பது தொடர்பாக கோவை அவினாசிலிங்க பல்கலைக்கழக பேராசிரியர் சாரதாமணி பேசினார். "சந்தை தகவல் மூலம் உயர் லாபம் பெறுதல்' என்ற தலைப்பில் கோவை தமிழ்நாடு வேளாண் பல்கலைகழக உதவி பேராசிரியர் ரோகிணி, மொபைல்ஃபோன் மூலம் சந்தை விலை விபரங்களை தெரியப்டுத்தல் தொடர்பாக விளக்கினார்.

தோட்டக்கலை துறை திட்டங்கள் குறித்து பாலக்கோடு உதவி தோட்டக்கலை இயக்குனர் பாஸ்கர் பேசினார். பாலக்கோடு "நஞ்சப்பா ஃபுட் புராடக்ட்ஸ்' உரிமையாளர் வடிவேல் தக்காளியில் இருந்து மதிப்பூட்டபட்ட பொருட்கள் தயாரிப்பது விற்பனை வாய்ப்புகள் தொடர்பாக விளக்கி பேசினார். பயிற்சியில் பங்கேற்ற விவசாயிகளக்கு ஊக்க தொகை, தொழில் நுட்ப அச்சு பிரதிகள் வழங்கப்பட்டன. பாலக்கோடு தக்காளி வணிக வளாகத்தில் 263 விவசாயிகள் 36,821 கிலோ தக்காளியை ஒரு லட்சத்து 94 ஆயிரத்து 810 ரூபாய் மதிப்பில் கமிஷன், தரகு கேட் தொகை எதுவும் இன்றி விற்பனை செய்து 10 முதல் 17 சதவீதம் கூடுதல் வருவாய் பெற்றனர். பயிற்சிக்கான ஏற்பாடுகளை வேளாண் வணிக உதவி வேளாண் அலுவலர்கள் செல்வம், காளியப்பன், கோபால், நாகராஜன், பாக்கியராஜ், சிவலிங்கம் ஆகியோர் செய்திருந்தனர். அரூர் வேளாண் (வணிக வேளாண்) அலுவலர் சந்தியபிரகாஷ் நன்றி கூறினார்.

**நன்னீர் இறால் வளர்ப்பு பயிற்சி நிறைவு விழா**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2012,03:04 IST

தர்மபுரி: தர்மபுரி அடுத்த குண்டல்பட்டியில் கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் மற்றும் தமிழ்நாடு கால்நடை பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம் சார்பில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு ஐந்த நாட்கள் நன்னீர் இறால் வளர்ப்பு பயிற்சி முகாம் நிறைவு விழா நடந்தது. கலெக்டர் லில்லி தலைமை வகித்தார். கடல் பொருள் ஏற்றுதி மேம்பாட்டு ஆணைய துணை இயக்குனர் வில்சன் வரவேற்றார். கடல் பொருள் ஏற்றுதியில் நன்னீர் இறால் ஏற்றுதியும் முக்கிய பங்கு வகிப்பதையும், தற்போது உள்நாட்டு மீன் வளர்ப்பில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் நன்னீர் இறால் வளர்ப்பையும் மேற்கொண்டு தங்கள் ஆண்டு வருமானத்தை அதிகரித்து கொள்ளலாம் எனவும் தொழில் நுட்ப மற்றும் மானிய உதவிகள் குறித்து விளக்கினார்.

கலெக்டர் லில்லி பேசியதாவது: தர்மபுரி மாவட்டத்தில் வாணியாறு அணை, தும்பளஹள்ளி,

தொப்பையாறு, நாகாவதி, வரத்துப்பள்ளம், ஈச்சம்பாடி மற்றும் மேட்டூர் அணை கரையில் உள்ள நீர் நிலைகளை பயன்படுத்தி ஏற்றுமதி செய்யக்கூடிய மீன்கள் மற்றும் இரால்களை அதிக அளவில் உற்பத்தி செய்து வருமானத்தை பெருக்கி கொள்ளலாம்.
தஞ்சாவூர் கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் மற்றும் தர்மபுரி கால்நடை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தையும், தமிழ்நாடு மீன் வளத்துறை ஆகிய அலுவலகங்களை அணுகி பயன்பெறலாம். இவ்வாறு பேசினார்.

பயிற்சியின் போது, நன்னீர் இறால் வளர்க்க குளங்கள் அமைத்தல், குஞ்சுகள் தேர்வு செய்தல், அறிவியல் முறைப்படி வளர்த்து ஏற்றுமதி செய்வது குறித்தும், நேரடியாக மீன் வளர்ப்பு பண்ணை அமைந்துள்ள பிலிகுண்டு மற்றும் ஒகேனக்கல் ஆகிய இடங்களுக்கு பயனாளிகள் அழைத்து செல்லப்பட்டு கள செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது..
பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. உதவி பேராசிரியர் சிதம்பரம் நன்றி கூறினாசர். ஏற்பாடுகளை ராமசாமி, ஐயப்பன், அங்குராஜ் ஆகியோர் செய்திருந்தனர்.

**குறைந்த நீரில் காய்த்துக் குலுங்கும் மா மரங்கள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2012,02:29 IST

சென்னிமலை: வறட்சிக்கு இலக்கான சென்னிமலை வட்டாரத்தில், குறைந்த நீரில் மா பயிரிடும் பரப்பு அதிகரித்து வருகிறது. தற்போது, 70 ஹெக்டேரில் மா மரம் காய்ப்பு துவங்கியுள்ளது. சென்னிமலை வட்டாரம் வறட்சியின் பிடியில் ஒருபுறம் சிக்கித்தவிக்கும் நிலையில்; மற்றொரு புறம் ஒரத்துப்பாளையம் அணை மற்றும் சிப்காட் ஆலைக்கழிவால் பாதிக்கப்பட்ட பரப்பும் அதிகரித்து வருகிறது. இருந்தும் கூட ஒரு சில பகுதியில் விவசாயிகள் மா பயிர் செய்து வருமானம் பார்த்து, பசுமைபுரட்சியை அரங்கேற்றி வருகின்றனர்.

சென்னிமலை யூனியனில் தோட்டக்கலைத் துறை மூலம், "தேசிய தோட்டக்கலை இயக்கம்' என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு, மா, நெல்லி போன்ற மரங்கள் சாகுபடி செய்யப்படுகிறது. சென்னிமலை வட்டாரத்தில் நிகர சாகுபடி பரப்பு, 14 ஆயிரத்து 600 ஹெக்டேர். ஆண்டு தோறும்7,000 ஹெக்டேர் சாகுபடி ஏதுமின்றி தரிசாக விடப்படுகிறது. தரிசு நிலங்களில், அரிதாக கிடைக்கும் தண்ணீரைக் கொண்டு சொட்டு நீர்ப் பாசனம் மூலம் மாந்தோப்புகள் உருவாக்கப்படுகின்றன. இத்தரிசு நிலங்கள் அங்காங்கே பசுமை சுரங்கங்ளாக மாற்றப்படுகின்றன. சென்னிமலை உள்வட்டத்தில், 43 ஹெக்டேர், வெள்ளோடு உள்வட்டத்தில்,

18 ஹெக்டேரில் மா சாகுபடி செய்யப்பட்டுள்ளது. வெள்ளோடு, மேட்டுப்பாளையம் கிராமத்தை சேர்ந்த துரைசாமி தனது தோட்டத்தில் இரண்டு ஹெக்டேரில், 160 மா மரங்களை சாகுபடி செய்துள்ளார். டிராக்டரில் தண்ணீர் எடுத்துவந்து ஊற்றி, மாமரங்களை வளர்க்கிறார்.

துரைசாமி கூறியதாவது: மா மரங்களை காப்பாற்ற இப்பகுதியில் எவ்வித நீராதாரமும் கிடையாது. ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் இருந்து, டிராக்டர் மூலம் தண்ணீர் கொண்டு வந்து, 15 நாட்களுக்கு ஒரு முறை ஊற்றி, நான்கு ஆண்டுகளாக மாங்கன்றுகளை காப்பாற்றி வந்துள்ளேன். இப்படி மா வளர்ப்பதை பார்த்து "இப்படி தண்ணீர் ஊற்றி எங்கே மா வளரப் போகிறது' என, பலர் கிண்டல் செய்தனர். தற்போது, காய்கள் காய்த்து தொங்குவதை பார்த்து பொறாமைப் படுகின்றனர். கோடை காலத்தில் மட்டும், 15 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் ஊற்றுகிறேன். தற்போது, மாந்தோப்பை பார்க்கும் போது எனக்கே பிரமிப்பாக உள்ளது. காய்ப்பு துவங்கி உள்ளது. வியாபாரியிடம், 17 ஆயிரம் ரூபாய்க்கு, ஓராண்டுக்கு குத்தகையாக பேசி விற்றுவிட்டேன். நல்ல பலன், என்றார்.

நுண்ணீர் பாசனம்

தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் சுப்பிரமணியன் கூறியாதவது: இத்திட்டத்தின் கீழ் பழ மரக்கன்றுகள் மா, நெல்லி, கொய்யா, எலுமிச்சை சாகுபடி செய்ய மானியம் வழங்கப்படுகிறது மேலும் நுண்ணீர் பாசனத்திட்டத்தின் கீழ் சொட்டு நீர் பாசனம் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது என்றார். இதனால் வறட்சி பகுதியான சென்னிமலை பகுதி மா விளையும் பூமியாக மாற்ற விவசாயிகள் மத்தியில் மவுன புரட்சியாக இது நடந்து வருகிறது.

**விவசாயத்துறையில் கோவை மாவட்டம் முன்னோடி :வேளாண் அமைச்சர் பெருமிதம்**

திவு செய்த நாள் : ஜனவரி 10,2012,02:29 IST

பொள்ளாச்சி : "கோவை மாவட்டம் விவசாயத்துறையில் முன்னோடி மாவட்டமாக திகழ்கிறது' என, வேளாண் துறை அமைச்சர் தாமோதரன் தெரிவித்தார்.

பொள்ளாச்சி அடுத்த ராமபட்டிணம் பிரிவில் விவசாயிகளுக்கு மானிய விலையில் பண்ணை உபகரணங்கள் மற்றும் மகளிர் குழுக்களுக்கு சுழல் நிதி வழங்கும் விழா நடந்தது. வடக்கு ஒன்றியத்திலுள்ள 46 மகளிர் குழுக்களுக்கு ஒருங்கிணைந்த நீர்வடிப்பகுதி மேலாண்மை திட்டத்தின் மூலம் தலா 24 ஆயிரம் வீதம் சுழல்நிதியை வேளாண் துறை அமைச்சர் தாமோதரன் வழங்கினார்.

வேளாண் பொறியியல் துறை சார்பில் நடந்த விழாவில், விவசாயிகள் ஐந்து பேருக்கு மினி டிராக்டர் வழங்கினார். பண்ணைக்கருவிகளுக்கு தலா 1.25 லட்சம் மானியமாக வழங்கப்பட்டது. விழாவில், வேளாண் பொறியியல் துறை கண்காணிப்பு பொறியாளர் சிவப்பிரகாஷ்,

செயற்பொறியாளர் ஜெகநாதன், உதவி செயற்பொறியாளர் பாலசந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

வேளாண் துறை அமைச்சர் தாமோதரன் பேசியதாவது:

மகளிர் குழுக்கள் துவங்கப்பட்டு அவர்களுக்கு பொருளாதாரக் கடன், சுழல் நிதி வழங்கும் போது அவர்களின் குடும்பம் பொருளாதார ரீதியாக மேம்பாடு அடையும். தி.மு.க., ஆட்சியில் தனிநபர் கடனாக வழங்கப்பட்டு முறைகேடுகள் நடந்தன. தற்போது முதல்வர் உத்தரவின்படி, குழுக்களுக்கு மொத்தமாக கடனுதவி வழங்கப்படுகிறது.

விவசாயிகளுக்கு பண்ணை உபகரணங்கள் வாங்குவதற்கு நேரடி மானியம் வழங்கப்படுகிறது. பவர் ஸ்பிரேயர், சொட்டு நீர்பாசனம், தெளிப்பு நீர் பாசனம், டிரேக்டர் உள்ளிட்ட பண்ணைக்கருவிகள் வாங்க வேளாண் பொறியியல் துறை மூலம் மானியம் வழங்கப்படுகிறது. அனுமதி பெற்ற பண்ணைக்கருவிகளுக்கு மானியம் கழித்து பணம் வசூலிக்கப்படுகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு விவசாயம் முதன்மையானதாக உள்ளது. ஆனால், கோவை மாவட்டத்தில் நெல், கரும்பு, வாழை, தென்னை போன்றவையும், அனைத்து தானியம், காய்கறி பயிர்களும் சாகுபடி செய்யப்படுகிறது. கோவை மாவட்டம் விவசாயத்துறையில் முன்னோடி மாவட்டமாகவும், வேளாண் பண்ணைக்கருவி தொழில்நுட்பங்களை கையாளும் மாவட்டமாகவும் மாறி வருகிறது.

விவசாயிகளும் உற்பத்தியை பெருக்கி, உணவு உற்பத்தியில் தன்னிறைவு நிலையை அடைய ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். இவ்வாறு, அமைச்சர் தாமோதரன் பேசினார். விழாவில் எம்.பி., சுகுமார், ஆத்மா திட்ட தலைவர் சக்திவேல், வடக்கு ஒன்றியத்தலைவர் செல்விபத்மினி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**உற்பத்தி அதிகரிப்பால் தக்காளி விலை சரிவு : வெங்காய விளைச்சலும் அமோகம்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2012,02:12 IST



கோவை : கர்நாடகா மற்றும் தமிழகத்தில், தக்காளி மற்றும் வெங்காய உற்பத்தி அதிகரித்ததால், கோவை மார்க்கெட்டில் விலை சரிந்து, கிலோ நான்கு ரூபாய் முதல் ஐந்து வரை விற்பனையாகிறது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு, தக்காளி விலை மார்க்கெட்டில் கிலோ ஒன்றுக்கு, அதிகபட்சமாக 17 ரூபாய் வரை விற்றது. கடந்த சில நாட்களுக்கு முன், கோவை மார்க்கெட்டுக்கு தக்காளி வரத்து அதிகரிக்கத் துவங்கியது; தற்போது, நாளொன்று 15 லாரிகளில் தக்காளி வருகிறது.

கிருஷ்ணகிரி, மைசூர், ஓசூர் பகுதிகளில் இருந்து கோவைக்கு, அதிக அளவு தக்காளி வந்து கொண்டிருக்கிறது. உள்ளூர் பகுதிகளான, ஆலாந்துறை, மாதம்பட்டி, செம்மேடு, நாச்சிபாளையம், பாலத்துறை ஆகிய பகுதிகளிலும், தக்காளி விளைச்சல் அதிகரித்துள்ளது. மார்க்கெட்டில் தக்காளி குவியத் துவங்கிவிட்டது. அன்றாடம் நடக்கும் தக்காளி ஏலத்தில் கூட, வியாபாரிகள் ஆர்வம் காட்டுவதில்லை. இதனால், 16 கிலோ எடை கொண்ட, ஒரு டிப்பர் தக்காளி, அதிகபட்சமாக 50 முதல் 75 ரூபாய் வரை ஏலம் போகிறது.

சில்லரை வர்த்தகத்தில், ஒரு கிலோ தக்காளி, ஐந்து ரூபாய்க்கு விற்பனையாகிறது. கூலி கொடுத்து, விலை கட்டுப்படியாகாததால், விவசாயிகள், தக்காளிகளை மாடுகளுக்கு தீவனமாக, கொடுத்து வருகின்றனர்.

கடந்த வாரம், கிலோ 25 ரூபாய்க்கு விற்ற, சின்ன வெங்காயம், தற்போது, கிலோ 12 ரூபாய்க்கு விற்பனையாகிறது. ஈரோடு, சேலம், கோவை உள்ளிட்ட பகுதிகளில், சின்ன வெங்காயம் நல்ல விளைச்சலை கொடுத்துள்ளதால், விலை சரிவடைந்துள்ளது.

பெரிய வெங்காயம், வரத்து அதிகரித்துள்ளதால், கிலோ ஐந்து முதல் எட்டு ரூபாய் வரை விற்பனையாகிறது.

புனே, சோலாப்பூர், மும்பை உள்ளிட்ட பகுதிகளில், அதிக அளவு விளைச்சல் இருந்ததால்,பெரிய வெங்காயத்தின் விலை சரிந்துள்ளதாக கூறுகின்றனர்.

கோவை மாவட்ட அனைத்து காய்கறி வியாபாரிகள் சங்க (மொத்தம்) செயலாளர் அப்துல் அஜீஸ் கூறியதாவது:

வழக்கமாக இந்த சீசனில், தக்காளி விலை குறையும் தருணம். இந்த ஆண்டு, கொஞ்சம் அதிகமாகவே, விளைச்சலை கொடுத்துள்ளது. அதனால், எதிர்பாராத சரிவை தொட்டுள்ளது.

கடந்த வாரத்தில், பச்சை மிளகாய் மட்டும், கிலோ 28 ரூபாய் வரை விற்பனையானது. தற்போது, 14 ரூபாய்க்கு விற்பனையாகிறது. உள்ளூரில், பச்சை மிளகாயின் வரத்தும் அதிகரித்துள்ளதால்,விலை குறைந்துள்ளது. மற்ற காய்கறிகள், எப்போதும் போல், வழக்கமான விலையில் விற்பனையாகின்றன, என்றார்.

**வேளாண் விரிவாக்க மையத்தை புதுப்பிக்க வேண்டுகோள்**

பதிவு செய்த நாள் : ஜனவரி 10,2012,01:50 IST

கருத்தை பதிவு செய்ய

திருப்பூர் ; சிதிலமடைந்து வரும், வேளாண்துறை கட்டடத்தை புதுப்பிக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருப்பூர் ஊராட்சி ஒன்றிய பகுதிகளை சேர்ந்த விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் மற்றும் விதைகளை இருப்பு வைக்க, இணை வேளாண் கிடங்கு உள்ளது. 1971ம் ஆண்டு ஒன்றிய அலுவலக வளாகத்தில் விவசாயிகளுக்கான கிடங்கு அமைக்கப்பட்டது.

வேளாண் விரிவாக்க மையம் கலெக்டர் அலுவலக வளாகத்தில் இயங்குவதால், முக்கிய அதிகாரிகள் அங்கு மட்டும் செல்கின்றனர். ஒன்றிய அலுவலக வளாகத்தில் உள்ள இணை வேளாண் கிடங்கும், மக்களின் நேரடி

பார்வையில் இல்லாமல், அலுவலகத்தில் மேற்கு பகுதியில் மறைந்துள்ளது.

சொற்ப விவசாயிகள் மற்றும் கிடங்கு அதிகாரி கள் மட்டுமே அங்கு செல்கின்றனர். வேளாண் கிடங்கு பழுதடைந்து வருவது பலருக்கும் தெரிவதில்லை. விவசாயிகள் பலமுறை கோரிக்கை விடுத்தும் உயரதிகாரிகள் கண்டுகொள்ளவில்லை.

வேளாண் இணை கிடங்கு கட்டடம் 40 ஆண்டு கடந்தும், சுவர்கள் வலுவாக உள்ளன; மேற்கூரை கான்கிரீட் சிமென்ட் பூச்சு பெயர்ந்து, கம்பிகள் வெளியே தெரிகின்றன; முகப்பில் உள்ள அலுவலகத்துக்குள் மழைநீர் வடிவதால் உரம், விதைகள் வீணாகிப்போகும் அபாயம் உள்ளது. வேளாண்துறை கட்டடமாக இருந்தாலும், பொதுப்பணித்துறை மூலமாகவே கட்டட பராமரிப்பு பணி மேற்கொள்ள முடியும். வேளாண்துறை உயரதிகாரிகள், சிதிலமடைந்து வரும் கட்டடத்தை பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், என்பது விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளது.

**பண்ணை இயந்திரங்கள் பயன்படுத்த அழைப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2012,23:39 IST

கருத்தை பதிவு செய்ய

ராமநாதபுரம் : தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், மத்திய சார்பு திட்டங்களின் கீழ் வேளாண் கருவிகள் மானிய விலையில் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் டிராக்டர், மினி டிராக்டர், பவர் டில்லர், களை வெட்டும் கருவி, புதர் நீக்கும் கருவி, மரம் வெட்டும் இயந்திரம், விதை விதைக்கும் கருவி, நெல் நாற்று நடும் இயந்திரம், தோட்டக்கலை பயிர்களுக்கு தேவையான கருவிகள் மற்றும் இயந்திரங்கள் வாங்க வேளாண் பொறியியல் துறை மூலம் மானியம் வழங்கப்பட உள்ளது. ராமநாதபுரம், பரமக்குடி விவசாயிகள் பட்டா, சிட்டா, அடங்கல் ஆவணங்களுடன் உதவி செயற்பொறியாளரை தொடர்பு கொள்ளலாம். தொடக்க வேளாண் கடன் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கருவிகள் வாடகைக்கு வழங்கப்பட உள்ளது.

**சொட்டு நீர் பாசனத்தில் சிக்கல்: நிபந்தனையை தளர்த்த எதிர்பார்ப்பு**

பதிவு செய்த நாள் : ஜனவரி 09,2012,22:29 IST

கருத்தை பதிவு செய்ய

ஸ்ரீவில்லிபுத்தூர் : இலவச சொட்டு நீர் பாசனத்தின் அனைத்து விவசாயிகளும் பலன் பெறும் வகையில், நிபந்தனையை தளர்த்த வேண்டுமென விவசாயிகள் விரும்புகின்றனர்.

ஸ்ரீவில்லிபுத்தூரில் திருந்திய கரும்பு சாகுபடி குறுகிய பண்ணை திட்டத்தின் மூலம் சிறு, குறு விவசாயிகளுக்கு, 100 சத மானியத்தில் சொட்டு நீர் பாசனம் வழங்கப்படவுள்ளது. இத்திட்டம் பெண்கள், ஆதி திராவிட, பழங்குடியினர், முன்னாள் ராணுவத்தினர், மாற்று திறனாளிகளுக்கு முன்னுரிமைபடி, வழங்கப்படவுள்ளது. அதிகபட்சமாக 1 ஏக்கர் நிலபரப்பு வைத்திருப்பவர்களுக்கு, 43ஆயிரத்து 816 ரூபாய் மானியமாக வழங்கப்படுகிறது. அதற்கு மேல் ஏற்படும் செலவுகளுக்கு 75 சதவித மானியம் வழங்கப்படுகிறது. திட்டம் ஸ்ரீவில்லிபுத்தூரில் மட்டும் 50 ஏக்கர் பரப்பில் செயல்படுத்தப்பட உள்ளன. மேலும், 50 ஏக்கரும் ஒரே இடத்தில் இருக்க வேண்டுமெனவும் அரசு நிபந்தனை விதித்துள்ளது. ஒரே இடத்தில் 50 விவசாயிகள் கிடைப்பதில் சிரமம் ஏற்பட்டுள்ளது.

இதனால், அனைத்து விவசாயிகளும் பலன் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது விளைநிலங்கள் பிளாட்டுகளாக மாறி வரும் நிலையில், மொத்த நிலபரப்பு கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதில் குறைந்தளவு விவசாயிகளே பலன் பெறும் வாய்ப்புள்ளது. இதை தவிர்க்க ,அனைத்து விவசாயிகளும் பலன் பெறும் வகையில் ,ஒரு வருவாய் கிராமத்தில் 50 ஏக்கர் பரப்பு என்பதை மாற்றியமைத்தால், விவசாயிகள் பயன் பெறுவர்.

தினகரன்

**சேலத்தில் 12ம் தேதி சந்தனக்கட்டை ஏலம்**

பதிவு செய்த நாள் : 1/10/2012 1:18:49 AM



சேலம்: சேலத்தில் உள்ள வனத்துறை அலுவலகத்தில் வரும் 12ம் தேதி 100 டன் சந்தனக்கட்டை ஏலம் விடப்படுகிறது. தமிழகத்தில் சத்தியமங்கலம், திருப்பத்தூர், சேலம் அஸ்தம்பட்டி ஆகிய பகுதிகளில் வனத்துறைக்கு சொந்தமான சந்தனக்கட்டை கிடங்குகள் உள்ளன. இந்த கிடங்குகளில் இருக்கும் சந்தனக்கட்டை மூன்று மாதத்திற்கு ஒரு முறை ஏலம் விடப்படும்.

அஸ்தம்பட்டி வனத்துறை சந்தனக்கிடங்கில் ஜஜ்போகல், வேர், செலியா, அயன்பெக்கர் உள்ளிட்ட 11 வகையான சந்தனக்கட்டைகள் உள்ளன. இங்குள்ள 375 டன் சந்தனக்கட்டைகளில் 131 டன் சந்தனக்கட்டைகளை ஏலம் விட வனத்துறையினர் முடிவு செய்துள்ளனர். வரும் 12ம் தேதி ஏலம் நடைபெற உள்ளது.

---

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**புயல் பாதித்த பகுதிகளை பார்வையிட்ட மத்தியக்குழுவிடம் விவசாயிகள் கண்ணீர் விட்டு கதறல் 'வாழ்க்கை ஆதாரத்தையே இழந்து தவிக்கிறோம்'**



கடலூர் மாவட்டம் வான்பாகத்தில் தானே புயலால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை மத்திய குழு அதிகாரிகள் பார்வையிட்ட போது எடுத்த படம்.

*கடலூர், ஜன.10–*

*கடலூர் மாவட்டத்தில் புயல் பாதித்த பகுதிகளை பார்வையிட்ட மத்தியக்குழுவிடம், விவசாயிகள் ,'எங்கள் வாழ்க்கை ஆதாரத்தையை இழந்து தவிக்கிறோம்' என்று கூறி கண்ணீர் விட்டு கதறினார்கள்.*

*'தானே' புயல்*

*கடந்த 30–ந்தேதி கடலூருக்கும், புதுச்சேரிக்கும் இடையே கரை கடந்த 'தானே' புயல் கடலூர் மாவட்டத்தில் பெரும் சேதத்தை ஏற்படுத்தியது, புயலால் 41 பேர் பலியானார்கள், $3^{1/2}$ லட்சம் வீடுகள் சேதம் அடைந்தன, ஒரு லட்சத்து 8 ஆயிரம் ஹெக்டேர் பயிர்கள், முந்திரி, பலா, வாழை மரங்கள் அழிந்தன, 45 ஆயிரம் மின்கம்பங்கள் முறிந்து விழுந்தன. இதன் சேதமதிப்பு மட்டும் 4 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு இருக்கும் என்று கூறப்படுகிறது.*

*புயல் பாதித்த பகுதிகளில் நிவாரண பணிகள் போர்க்கால அடிப்படையில் நடந்து வருகின்றன. இந்த நிலையில் புயல் பாதிப்பை பார்வையிடுவதற்காக மத்திய குழுவினர் 2 நாட்களுக்கு முன்பு சென்னைக்கு வந்தனர், நேற்று முன்தினம் புதுச்சேரியில் புயல் பாதிப்புகளை பார்வையிட்டனர், நேற்று காலையில் மத்தியக்குழுவினர் புதுச்சேரியில் இருந்து புறப்பட்டு கடலூருக்கு ந்தனர்.*

*மத்தியக்குழு வருகை*

*இந்த குழுவில் மத்திய அரசின் உள்துறை இணைச்செயலாளர் லோகேஷ்ஜா தலைமையில் மத்திய வேளாண்மை துறை இயக்குனர் மனோகரன், மத்திய திட்டக்குழு முதுநிலை ஆராய்ச்சி அலுவலர் முரளிதரன், மத்திய நீர்வள ஆதாரத்துறை கண்காணிப்பு பொறியாளர் சுந்தரமூர்த்தி, மத்திய தரைவழி போக்குவரத்து கண்காணிப்பு பொறியாளர் விஜய் மிஷ்ரா, மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநலத்துறை முதுநிலை மண்டல இயக்குனர் டாக்டர் பழனிவேலு, மத்திய மின்துறை இயக்குனர் விவேக்கோயல், மத்திய குடிநீர் மற்றும் பொதுசுகாதாரத்துறை துணை ஆலோசகர் தத்தாசவுத்ரி, மத்திய கால்நடை மற்றும் மீன்வளத்துறை நிர்வாக இயக்குனர் டாக்டர் பால்பாண்டியன் ஆகியோர் வந்திருந்தனர்.*

*பள்ளிக்கூடத்தை பார்வையிட்டனர்*

*கடலூருக்கு வந்த மத்திய குழுவினரை கலெக்டர் அமுதவல்லி மற்றும் பேரிடர் கண்காணிப்பு சிறப்பு அதிகாரி அபூர்வா ஆகியோர் வரவேற்றனர். பின்னர் கலெக்டர் மற்றும் அரசின் உயர் அதிகாரிகளுடன் மத்தியக்குழுவினர் சிறிது நேரம் ஆலோசனை நடத்தினார்கள். பின்னர் புயல் பாதித்த பகுதிகளை பார்வையிடுவதற்காக மத்தியக்குழுவினர் தமிழக அரசு அதிகாரிகளுடன் புறப்பட்டனர்.*

முதலில் கடலூர் அருகே உள்ள தோட்டப்பட்டு பஞ்சாயத்துக்கு உள்பட்ட டி.குமாரபுரத்துக்கு வந்தனர், இங்கு புயலால் மரம் முறிந்து விழுந்ததில், ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வகுப்பறை கட்டிடம் இடிந்து விழுந்துள்ளதை மத்தியக்குழுவினர் பார்வையிட்டனர்.
இதன்பிறகு காராமணிக்குப்பம் கிராமத்தில் ஒருங்கிணைந்த கூட்டு குடிநீர் திட்ட நீர் ஏற்று நிலையத்தை பார்வையிட்டனர்.

வான்பாக்கம்

பின்னர் நெல்லிக்குப்பம் வந்த மத்தியக்குழுவினரை பெண்கள் சந்தித்து, நிவாரண நிதி வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக முறையிட்டனர்.
அதன்பிறகு நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு உள்பட்ட வான்பாக்கத்தில் புயலால் சேதம் அடைந்த குடிசை வீடுகள், மின்கம்பங்களை பார்வையிட்டனர்.
பின்னர் வான்பாக்கத்தில் பயிர் சேதத்தை பார்வையிடுவதற்காக சென்றனர். அந்த வழியில் சேதம் அடைந்த மின்கம்பங்கள், மின்மாற்றியை மின்வாரிய ஊழியர்கள் சீரமைத்துக்கொண்டு இருந்ததை பார்வையிட்டனர்.

கண்ணீருடன் முறையீடு

பின்னர் புயலால் பாதிக்கப்பட்ட நெற்பயிர்களை பார்வையிட்டனர். அப்போது விவசாயிகள் கண்ணீர் விட்டு கதறி அழுதபடியே சேதங்களை எடுத்துக்கூறினார்கள்.
கோவிந்தராமன்(வயது73) என்ற விவசாயி கூறுகையில், எனது அனுபவத்தில் எத்தனையோ புயல்களை பார்த்திருக்கிறேன், அந்த புயல்களில் ஏற்பட்ட சேதத்தை விட அதிகமான சேதம் இந்த புயலில் ஏற்பட்டு உள்ளது. நாங்கள் பயிருக்கு இன்சூரன்சு கூட செய்யவில்லை, எனவே கூடுதல் நிவாரணம் வழங்க வேண்டும் என்று கண்ணீருடன் முறையிட்டார்.
இதன் பிறகு வான்பாக்கத்தைச்சேர்ந்த தென்னை விவசாயி ஸ்ரீதரை மத்தியக்குழுவினர் சந்தித்தனர், இவர் 10 ஏக்கரில் தென்னந்தோப்பு வைத்திருந்தார், அந்த தோப்பில் இருந்த மரங்களெல்லாம் சாய்ந்து விட்டன, 25 ஆண்டுகளாக எனக்கு வாழ்வளித்த தென்னந்தோப்பு முற்றிலும் அழிந்து விட்டது, என் பிள்ளைக்காக இதை வைத்திருந்தேன், இனி அடுத்த பயிர் வைக்கக்கூட என்னிடம் பணம் வசதியில்லை, அடுத்த பயிர் வைக்க எனக்கு அரசு நிதி உதவி செய்ய வேண்டும் என்று ஸ்ரீதர் சொல்லி விட்டு குலுங்கி, குலுங்கி அழுதார், அவரது கைகளை பிடித்துக்கொண்டு மத்தியக்குழு தலைவர் ஜா ஆறுதல் கூறினார்.
பின்னர் பண்ருட்டிக்கு செல்லும் வழியில் உள்ள தென்னந்தோப்பில் புயலால் சேதம் அடைந்த நெற்பயிர்கள், கரும்பு, மணிலா, காய்கறி செடிகள் ஆகியவற்றை மத்தியக்குழுவினர் பார்வையிடுவதற்காக அதிகாரிகள் வைத்திருந்தனர். அவற்றை மத்தியக்குழுவினர் பார்வையிட்டு, விவசாயிகளிடம் சேத விவரங்களை கேட்டனர். வாழப்பட்டு கிராமத்தில் சேதம் அடைந்த வாழைமரங்களை பார்வையிட்டனர்.

முந்திரி விவசாயிகள் கதறல்

இதன் பிறகு சாத்து பட்டு கிராமத்தில் புயலால் முறிந்து விழுந்த பலாமரங்களையும், முந்திரி மரங்களையும் மத்தியக்குழுவினர் பார்வையிட்டனர், முந்திரி, பலாவில் ஏக்கருக்கு எவ்வளவு வருமானம் கிடைக்கும் என்று விவசாயிகளிடம் கேட்டனர், அதற்கு விவசாயிகள், முந்திரியில் ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாயும், பலாவில் ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபாயும் வருமானம் கிடைக்கும், இனிமேல் இந்த முந்திரி சாகுபடி செய்து விளைச்சலுக்கு வர 10 ஆண்டுகள் ஆகும், அதுவரை எங்கள் வாழ்க்கை ஆதாரத்துக்கு என்ன செய்வோம்? என்று கண்ணீருடன் கூறினார்கள்.
இதன்பின்னர் மேல்மாம்பட்டு கிராமத்தில் முந்திரி மரங்களையும், காடாம்புலியூரில் புயலால் சேதம் அடைந்த முந்திரித்தோப்பையும் பார்வையிட்டனர். அந்த தோப்பின் உரிமையாளர் ராமலிங்கம் கூறுகையில், 25 ஏக்கரில் இருந்த முந்திரி மரங்களெல்லாம் அழிந்து விட்டது, எனது வாழ்க்கை ஆதாரமே போய் விட்டது, நாங்கள் மீண்டும் பயிர் வைத்து மகசூலுக்கு வர 10 ஆண்டுகள் ஆகி விடும், அதுவரை வாழ்க்கைக்கு நாங்கள் என்ன செய்வோம் என்று கூறி

*அவர் கதறி அழுதார்.*
*இன்று*
*இதன்பிறகு மத்தியக்குழுவினர் கடலூருக்கு வந்தனர். அங்கு பிற்பகலில் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்கள். பின்னர் தாழங்குடா கிராமத்தில் பாதிக்கப்பட்ட படகுகள், தெருவிளக்குகள், தென்னை மரங்களையும், கடலூர் நகரத்தில் புயலால் பாதிக்கப்பட்ட குடிசை வீடுகள், அன்ன வெளி கிராமத்தில் தென்னை மரங்கள், சத்திரம் அருகில் உள்ள காட்டுப்பாளையம், வெங்கடம்பேட்டை, வடதலைக்குளம் ஆகிய கிராமங்களில் முற்றிலும் சேதம் அடைந்த முந்திரி, வாழை பயிர்களையும் பார்வையிட்டு ஆய்வு செய்து, விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடம் புயல் பாதிப்பு குறித்து கேட்டறிந்தனர்.*
*இன்று(செவ்வாய்க்கிழமை) மத்தியக்குழுவினர் இருகுழுக்களாக பிரிந்து விழுப்புரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களுக்கு சென்று புயல் சேதங்களை பார்வையிடுகிறார்கள்.*

***ஜனவரி 1–ந் தேதி நிலவரப்படி தானிய கையிருப்பு இலக்கை விஞ்சியது***

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*
*புதுடெல்லி*
*ஜனவரி 1–ந் தேதி நிலவரப்படி, நாட்டின் கோதுமை கையிருப்பு 2.57 கோடி டன் என்ற அளவில் மார்ச் 31 –ந் தேதிக்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை விஞ்சி மூன்று மடங்காக அதிகரித்துள்ளது என அரசு செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*
*அதே போல் அரிசி கையிருப்பு 2.98 கோடி டன்னாக அதிகரித்துள்ளது. இதன் நிர்ணயிக்கப்பட்ட இலக்கு 1.18 கோடி டன் என்பது குறிப்பிடத்தக்கது.*
*இதன் காரணமாக, தனியார் நிறுவனங்களின் தானிய ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்டிருந்த தடையை தளர்த்தி, தலா 20 லட்சம் டன் சாதாரண அரிசி மற்றும் கோதுமை ஏற்றுமதிக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.*
*அவசர நிலை தேவைகளை கருத்தில் கொண்டு, 2009–ஆம் ஆண்டு முதல் அரசு மாதாந்திர கையிருப்புக்கு மேல் 30 லட்சம் டன் கோதுமையையும், 20 லட்சம் டன் அரிசியையும் கையிருப்பு வைத்து வருவது குறிப்பிடத்தக்கது.*